இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

14.04.2019 - 13.07.2019



FREE MAGAZINE

## வெற்றிகளை வழங்கும் வைகாசி விசாகம்

6 ஆம் ஆண்டில் கால் பதிக்கும்...



## அகிலாண்டேசுரர் திருக்கோவில்



## சிவசக்தி ஐக்கியம்

மாலை : 06 மலர் : 01

திருவள்ளுவர் ஆண்டு 2050

# துழைவாயில்..

**அகர தீபம் வாசக**
**அன்பர்களுக்கு வணக்கம்,**

புதிதாகப் பிறந்த ‘விகாரி’ எனப்படும் புத்தாண்டு அனைவருக்கும் எல்லா வளங்களையும், நலங்களையும் வாரி வழங்க வேண்டும் என்பதே அகரதீபம் கொண்டுள்ள பேராசை.

அரசியல் ரீதியாகத் தமிழ் இனம் மிகப் பெரும் பின்னடைவைச் சந்திக்க, எமது மக்களின் அரசியல் அறிவு தேவையான அளவுக்கு இல்லாத நிலையே முக்கிய காரணம் எனலாம்.

எமது அரசியல் தலைவர்களும், பொது மக்களிடையே அரசியல் அறியாமையை வளர்த்து, அதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போரை சிதைப்பதையே தமது கட்சி அரசியலாகக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

போரினாலும், போருக்குப் பின்னரான அரசின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தமது எந்த ஒரு குறையையும் தீர்க்க முற்படாத நிலையே தொடருகிறது. தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றையும், இழப்புகளையும் முழுமையாகத் தெரிந்து கொள்ளாத வரை ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும், அடிப்படைத் தேவைகளையும், முக்கியத்தையும் மக்கள் அறிந்து, அவற்றை அடையும் செயற்பாடுகளில் ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

மக்களின் ஆர்வத்தை மட்டுப் படுத்தவும், அவர்களின் அரசியல் போராட்டங்களை மழுங்கடிக்கவும், தமிழ் இனத்தின் அரசியல் போரட்டங்களை சிதைத்து அழிக்கவும், மகளின் கவனத்தை திசை திருப்பவும் சினிமாக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சின்னத்திரை தொடர்கள் முக்கிய பங்கேற்கின்றன.

அவ்வாறே மத நிறுவனங்களும், மதப் பிரச்சாரகர்களும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளின் முக்கியத்தை குறைத்தும், மூட நம்பிக்கை, இறை பக்தி, விதி, மோட்சம், நரகம், போன்றவற்றின் மீது பயத்தை ஏற்படுத்தியும், தமிழ் மக்களின் அடிமை வாழ்வை உறுதிப் படுத்துவதையும் காண்கிறோம். இதே பணியை ஆன்மீகம் என நம்பி அகரதீபம் பல பதிவுகளை செய்து வருவதையும் மறுக்க முடியாது.

அகர தீபம் இப்படி எல்லாம் எழுதுவது எப்படி ஆன்மீகம் ஆகலாம்? என்கிற சுய பார்வை எமது வாசகருக்கு ஏற்படலாம். உலகமே இப்படியான ஒரு மயக்க நிலையை ஏற்படுத்தித்தான் வெற்றிகளைக் குவித்து வருகிறது. ஆனால், அவை தமிழனின் அறம் சார்ந்த வெற்றி அல்ல! என்பதே கசப்பான உண்மை.

மீண்டும் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**

# சிவசக்தி ஐக்கியம்



சூரியனை பித்ருகாரகன் (தந்தையை நிர்ணயிப்பவர்) என்றும், சந்திரனை மாத்ருகாரகன் (தாயை நிர்ணயிப்பவர்) என்றும் கூறுவர். அதாவது அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி, தர்ப்பணம் செய்கிறோம்.

சூரியனுக்கு அதிதேவதையாக பரமசிவனையும், சந்திரனுக்கு அதிதேவதையாக பார்வதியையும் வைத்திருப்பதும் ஆராய்ச்சிக்கு உகந்தது. அமாவாசை, பௌர்ணமி அன்று முறையே சூரிய சந்திர சங்கமத்தையும், சமசப்தமமாக இருப்பதையும் சிவசக்தியின் ஐக்கியம் என்று கூறுவது மிகையாகாது.




அகர தீபம்

மாலை : 06 மலர் : 01

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

உதவி ஆசிரியர்
**வண்ணை தெய்வம்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

**00 49 176 47 11 87 11**

Email : akaratheepam@akaram.eu



**www.akaram.eu**

Germany, Switzerland, France
England, Denmark, Norway,
Holland, Sweden, Italy, Canada



© ETU e.V.2014 All rights reserved

கோவில்குளம் சிவாலயம் என அழைக்கப்படும் அகிலாண்டேசுரர் கோவில் வவுனியா நகரில் இருந்து நகரப் பேருந்து சிதம்பரம் வழி செல்லும் பாதையில், நகரத்தில் இருந்து உள்ளே மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. வவுனியா புகையிரத நிலையத்தில் இருந்து ஆட்டோ போன்ற வாகனங்களில் செல்வதற்கும் பாதை வசதிகள் உண்டு.

இவ் ஆலயத்தில் சுவாமி அகிலாண்டேசுரர், அம்பாள் அகிலாண்டேஸ்வரி ஆகிய இரு தெய்வங்களுக்கும் நித்திய வழிபாடுகள் நடைபெறுகின்றன.

இத் தலம் நான்கு ஏக்கர் சுற்றளவு விஸ்த்தீரணம் கொண்டது. சாலையில் இருந்து இறங்கியவுடன் ஆலய முகப்பில் இருப்பவர் தலவிநாயகர். இவரை மூத்த விநாயகர் என்றும் அழைப்பர். முகப்பு வாசலைத் தாண்டி உட்சென்றால் நான்கு பக்கமும் கொங்கிறீற் கற்களினாலான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த கொடிக் கம்பம், நந்தி, பலிபீடம் ஆகியவன அழகாக அமைக்கப் பட்டுள்ளது.

# அகிலாண்டேசுரர் திருக்கோவில்

**வண்ணை தெய்வம்**

(வவுனியா)



உள்ப்பிரகாரம் கிழக்கு மேற்காக நூற்றி ஐம்பது அடியும், வடக்கு தெற்காக தொண்ணூறு அடிகளும் விஸ்த்தீரணம் கொண்டது. நிலங்கள் யாவும் மாட்டுச் சாணகத்தால் மெழுகப்பட்டுள்ளது. வலமாக வரும்போது தம்ப மண்டபம் முடிந்தவுடன், நடராசர் சபை தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அதையடுத்து அம்பாள் சந்நிதி அமைந்துள்ளது.

அவற்றைக் கடந்து வந்தால் மூலவர் கோஸ்ட்டானத்தில் நிருத்த விநாயகர், தட்சணாமூர்த்தி ஆகியோரும், அதைத் தொடர்ந்து தென்மேற்கு மூலையில் உள்ள பிரகார விநாயகர் தரிசனம் முடிந்தால் லிங்கோற்பவரும், வடமேற்கு மூலையில் உள்ள பிரகாரத்தில் வள்ளி தேவசேனா சமேதமாக சுப்பிரமணியரும், கோஸ்ட்டானத்தில் பிரம்மா, துர்க்கை ஆகிய மூர்த்திகளும், ஈசான மூலையில் தெற்கை நோக்கியபடி யாகசாலையும் அமையப் பெற்றுள்ளது.

இரண்டாம் பிரகாரத்தில் வலமாக வருகின்ற போது அம்பாள் சந்நிதியின் முகப்பில் அமிர்தவர்ஷினி என்னும் புண்ணிய தீர்த்தம் வெண் சுண்ணாம்புக் கற்களால் அழகுறக்





கட்டப்பட்ட படிக்கட்டுக்களுடன் சிறப்பாகத் தோற்றம் தந்து கொண்டிருக்கின்றது. வடமேற்கு மூலையில் திருக்கோவிலின் மூன்று வாசல் கொண்ட சப்பறம் அழகான மண்டபத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் உள்ள சிவஸ்த்தலங்களில் நடு நாட்டில் இருக்கும் வவுனியா அகிலாண்டேசுரர் திருத்தலம் பல வகையிலும் சிறப்புடையது. கோவில்குளம் சிவாலயம் என்னும் காரணப் பெயருடன் அருள்பாலித்து வருகின்றது.

இவ்வாலயத்தின் முகப்பில் அருள்பாலிப்பவர் மூத்தவிநாயகர். இச்சிவாலயப் பணி ஆரம்பிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இவ்விநாயகர் ஆலயம் ஸ்தாபிக்கப் பட்டு இக்கிராம மக்களால் விழாக்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த விநாயகரின் திருவருளால் தான் சிவப்பணி மேற்கொள்ளப்பட்டு, இன்று ஆறாவது ஈஸ்வர தலமாக போற்றப்பட்டு வருகின்றது. இம் மூத்த விநாயகரின் பெருங்கருணையை நினைத்து மக்கள் வியப்புறுகின்றனர்.



ஆண்டில் வரும் பன்னிரண்டு மாதங்களிலும் இவ்வலயத்தில் பல்வேறு விழாக்கள் நடை பெறுகின்றன. அகிலாண்டேசுரருக்கு நடைபெறும் விழாக்கள் தனிச்சிறப்புடையனவாகும். மாதந்தோறும் நடைபெறும் விழாக்கள் பௌர்ணமி, பிரதோஷம், சுக்கிரவாரம், சோமவாரம் என்பனவாகும்.

நித்தியபூசை, நைமித்திய பூசைகளுடனும், விழாக்களுடனும் மட்டும் நின்று விடாமல் நம் முன்னோர்களால் வழிகாட்டப் பெற்று வந்த புராண படலங்கள், திருமுறை முற்றோதல்கள் ஆகியவனவை யெல்லாம் காலத்திற்குக் காலம் நடைபெறும் வகையில், 1996ம் ஆண்டு நடைபெற்ற பெருஞ்சாந்தி விழாவைத் தொடர்ந்து, வருடந்தோறும் திருஞானசம்ந்த நாயனார் குருபூசை நாள் முதல், பன்னிரு திருமுறைகளும் முற்றோதல் செய்யப்பட்டு, தைப்பூசத்தில் பூர்த்திவிழா நடைபெறுகின்றது.

மாதந்தோறும் வருகின்ற மகநட்சத்திர தினத்தன்று திருவாசகம் முற்றோதல் செய்து வருவதுடன், மார்கழி மாதம் முப்பது தினங்களும் வவுனியா நகரைச் சூழ்ந்துள்ள கிராமங்கள் தோறும் சென்று, ஆலயங்களில் திருவாசக முற்றோதலும் ஆலய நிர்வாகத்தால் கற்பிக்கப் படுகின்றது.

விநாயகர்சஷ்டி, கந்தசஷ்டி, திருவெம்பாவைக் காலங்களில் முறையே விநாயகர் புராணம், கந்தபுராணம், திருவாதவூரர் புராணம் ஆகியவன படிக்கப்பட்டு பலன் சொல்லப்பட்டும் வருகின்றது.

மகோற்சவ காலங்களில் பன்னிரண்டு திருமுறைகளும் ஓதப்படுவதும் வழமையாக நடை பெற்று வருகின்றது. இவை யாவும் திருமுறைகளுக்கும், புராணங்களுக்கும் எடுக்கப்படுகின்ற எழுச்சி விழாக்களாகும்.

இத் திருக்கோவில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இல்லாது, அவை சமூக நோக்கிலும் இருக்க வேண்டும் என்னும் பெருநோக்கில், ஆதரவு அற்ற சிறுவர்களுக்காக ஒரு இல்லம் அமைத்து, அவர்களின் நலனைச் சிறப்பாக அமைப்பதில் இவ் ஆலய நிர்வாகத்தின் தொண்டு மிக அளப்பரியது.

சமய ஆசார வழிமுறைகளைப் பேணிக் காக்க வேண்டும் என்ற வகையில், மாதந்தோறும் மாணவர்களுக்கு சமய தீட்சைகள் செய்து வருவதுடன், அது பற்றிய விளக்கங்களைப் பதிப்பித்து இலவசமாக வினியோகிக்கின்றார்கள்.

சிறப்பான திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு, சைவ சமய அடிப்படையில் திருமணங்களைச்

செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டு, பொது மக்கள் பாவனைக்கு விடப்பட்டு வருகின்றது. அத்துடன் பெண் குழந்தைகளுக்கு தொழிற் கல்விகள் வழங்குவதற்காகவும் ஒரு மண்டபம் கட்டப்பட்டு வருகின்றது.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கமைய ஒரு சிறந்த ராஜகோபுரத்தை அமைக்க இப்பொழுதுதான் திருவருள் கூடி வருகின்றது. காலக்கிராமத்தில் இதற்கான பணிகள் ஆரம்பமாகும் என ஆலய திருபாலன சபையினர் கூறுகின்றனர்.

இவ் ஆலயத்தை பராமரிப்பதற்கு 1987ம் ஆண்டு ஒரு சபை அமைக்கப்பட்டது. இதற்கு 'சித்தி விநாயகர் ஆலய சைவ மகாசபை" என பெயரிடப்பட்டு பதினொரு பெயரை உள்ளடக்கியவர்கள் ஆலயத்தை பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆலய விஸ்த்தீரணத்துக்காக ஆலயத்திற்கு பின்புறம் இருந்த காணியும் அரசாங்கத்தால் ஆலயத்திற்குத் தானமாக வழங்கப்பட்டதால் இன்று பெரிய அளவில் புனரமைக்கப்பட்ட சிவாலயமாக வவுனியா அகிலாண்டேசுரர் திருக்கோவில் விளங்குகின்றது.

# வாழைப்பழத்தின் முக்கியம்



எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் பூஜையில் வாழைப்பழம் மற்றும் தேங்காய் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது. எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டுதலை முன்னிறுத்தி நாம் நமது கடவுளுக்கு வாழைப் பழம் படைக்கிறோம்.

அதுபோல் தேங்காய்க்கும் அந்த குணம் உண்டு. அது மட்டுமல்ல தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டு விட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்து தான் தென்னைமரம் முளைக்கும். அது போல, வாழை மரத்திலிருந்து தான் வாழைக் கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள்.



# முருகப் பெருமானுக்கு ஏற்ற விரதங்களும் பலன்களும்...

முருகப் பெருமானுக்கு உகந்த விரதங்கள் என்று மூன்று விரதங்கள் பிரதானமாக பல்வேறு ஜோதிட நூல்களில் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் ஆகிய மூன்று விரதங்களில் ஏதேனும் ஒரு விரதத்தினையாவது தொடர்ச்சியாக கடைப் பிடிப்பவர்களுக்கு முருகப் பெருமானின் பரிபூரண அருள் கிடைக்கும் என்பது நம்மிடையே நிலவிவரும் நீண்டகால நம்பிக்கையாகும்.

## வார விரதம்

வார விரதம் என்பது வார நாட்களில் செவ்வாய் கிழமைகளில் கடைபிடிக்கும் உன்னத விரதமாகும். கிரகங்களில் செவ்வாய்க்கு அதிபதி முருகப் பெருமான். செவ்வாய் தோஷம் உள்ளவர்களும், பூமியினால் தீராத பிரச்னைகள் உள்ளவர்களும் செவ்வாய்க் கிழமைகளில் விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபட்டு வந்தால், விரைவிலேயே செவ்வாய் தோஷத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் அனைத்தும் படிப்படியாக நீங்கிவிடும்.

## நட்சத்திர விரதம்

நட்சத்திர விரதம் என்பது கார்த்திகை நட்சத்திரத்தில் கடைபிடிக்கும் அற்புதமான விரதம் ஆகும். கார்த்திகை நட்சத்திரத்துக்கு முதல்நாள் வரும் பரணி நட்சத்திரத்தன்று இரவில் உணவு உண்ணாமல் இருந்து, மறுநாள்

அதிகாலையில் நீராடி, அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று முருகப் பெருமானை வழிபட வேண்டும். அன்று பகல் முழுவதும் விரதம் இருந்து முருகப் பெருமானின் ஸ்தோத்திர நூல்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.



கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபடுபவர்கள், நிறைவான அறிவு, நிலையான செல்வம், நீண்ட ஆயுள், அன்பும் பண்பும் நிறைந்த வாழ்க்கைத் துணை, நல்ல குணமுள்ள குழந்தைகள் ஆகிய பேறுகளைப் பெற்று சிறப்புற வாழலாம்.

## திதி விரதம்

திதி விரதம் என்பது சஷ்டி திதியில் கடைபிடிக்கபடும் மேன்மையான விரத முறையாகும். மாதம் தோறும் வரக்கூடிய வளர்பிறை சஷ்டி திதியன்று காலையில் நீராடிவிட்டு, முருகப் பெருமானை தியானித்து, நாம் என்ன கோரிக்கைக்காக விரதம் இருக்கிறோமோ, அந்தக் கோரிக்கையை மனதில் சங்கல்பம் செய்து கொண்டு, விரதத்தைத் தொடங்க வேண்டும்.

அருகில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்துக்குச் சென்று வழிபட வேண்டும். வீட்டுக்குத் திரும்பியதும் பகல் முழுவதும் விரதம் இருக்கவேண்டும். முடிந்தால் மாலையில் மறுபடியும் ஒருமுறை கோயிலுக்குச் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வீட்டுக்கு திரும்பி விரதத்தை நிறைவு செய்யலாம். தொடர்ந்து ஆறு சஷ்டிகள் இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. குழந்தை வரம் தரும் விரதங்களில் முதன்மையான விரதமாக கந்த சஷ்டி விரதமே போற்றப் படுகிறது.

## அறிவோம் ஆன்மீகம்

**பாகம்- 17**



# கடவுள் இருக்கிறார் ஆனால் இல்லை

கடவுள் இருக்கிறார் ஆனால் இல்லை! இல்லை. ஆனால் இருக்கிறார்! அவர் ஆணா? ஆம் ஆண்தான்! பெண்ணா ஆம் பெண்தான்? ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை? அப்ப அலியா? அப்படியும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்! இப்படிப் போட்டுக் குழப்பினால் என்ன அர்த்தம்? அதுதான் தமிழன் கண்ட காணாத கும்பிட்ட கும்பிடாத கடவுள்.


மாணிக்க வாசகர் கடவுள் வானாகத் தெரிகிறான், மண்ணாகத் தெரிகிறான், நீராகத் தெரிகிறான், நெருப்பாகத் தெரிகிறான், காற்றாகத் தெரிகிறான், உடம்பாகத் தெரிகிறான், உயிராகத் தெரிகிறான் இப்படி எல்லாமாகத் தெரிந்த கடவுளை என்ன சொல்லி வாழ்த்துவேன் என்கிறார். கடவுளை வணங்க வில்லை, வரம் எதுவும் கேட்க வில்லை. ஆனால், வாழ்த்து மட்டும் சொல்லத் தெரியவில்லையே என்கிறார்.

இப்படி ஒருவன் கடவுளை எப்படி வாழ்த்துவது? எனக் கேட்பவனைக் கடவுள் பார்த்தால் ஆளை விடுடா சாமி என அலறிக் கொண்டு துண்டைக் காணோம் துணியைக் காணோம் எனத் தலை தெறிக்க ஓடுவானா மாட்டானா?

இதுதான் தமிழன் கண்ட, கொண்டாடி மகிழ்ந்த அவனது கடவுள். அவனைப் பொறுத்த வரை கடவுளுக்கு சாப்பாடு தண்ணீர் தேவையில்ல, பெண்டாட்டி, குடும்பம், பிள்ளை தேவை இல்லை. குடியிருக்க ஒரு குடிசை வீடு கூடத் தேவை இல்லை. அதனால் அவனால் 'தாவாரம் இல்லை, தனக்கு ஒரு வீடில்லை, தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்?' என்று குதம்பைச் சித்தர் என்றொரு தமிழன் பாடினான்.



'நாம் யார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்" என மற்றும் ஒரு தமிழன் திருநாவுக்கரசு பாடினான். உயிரைப் பறிக்கிற எமனைக் கண்டு அஞ்ச மாட்டேன் என்கிறவன்,



மாணிக்க வாசகர்



ஔவை



திருநாவுக்கரசு

சிவனே எனச் சும்மா இருக்கிற சிவனைக் கண்டால் அவன் கழுத்திலே கிடக்கிற பாம்பும் விசம் கக்கிச்சாகாதா?

உண்மையான கடவுளைக் கண்டவன் தமிழன். அதனால் களங்கம் இல்லாத, மாசு அற்ற மனம்தான் கடவுள். அதுவும் தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என இவ்வுலகம் சொல்லும் என்றால், அத்தகைய உலகத்தைப் படைத்த கடவுளும் பசியால் உழன்று, அழிந்து போகட்டும் என இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வள்ளுவன் என்ற மற்றொரு தமிழன் எழுதி வைத்து விட்டுச் செத்தான்.

இன்னொரு தமிழச்சியான ஔவைப் பாட்டி என்ற கிழவி நான் என் பாட்டுக்கு காலை நீட்டி இருப்பேன். அது உனது கடவுளை அவமதிக்கும் என்றால், உன்னுடைய கடவுள் இல்லாத திசையைக் காட்டு. நான் அந்தப் பக்கமாய் காலை நீட்டுகிறேன் எனச் சவால் விட்டாள். அந்தச் சவாலைக் கேட்டு வாயடைத்து



**வந்த வழியே ஓடி மறைந்தாள் அந்தச் சிவனின் மனைவி உமாதேவி என்கிறார்கள்.**

படைத்த கடவுள் எனச் சொல்லிக் கொண்டு எவனும் தமிழனை, தமிழனின் தன்மானத்தை அழித்துவிட முடியாது என்பதுதான் தமிழனின் பகுத்தறிவு என்ற மதமும், வாழ்வியலும். அப்படி பெருமிதத்தோடு வாழ்ந்த தமிழன் இன்று எப்படி எடுப்பார் கைப் பிள்ளையாக, எவன் காலடியிலும் அடிமையாகப் பணி செய்யும் புழுவாக மாறினான்?

தமது முன்னோரை, மூத்தோரைக் கடவுளாகவும் அவர்களின் வாக்கை வேத வாக்காகவும் போற்றி வாழ்ந்த வரைக்கும் தமிழனின் பெருமைகள் வானளவு நிறைந்து கிடந்தன. அப்படி அவன் போற்றிய வழிபாடுகளை பிராமணர்கள் தமது தேவர்களாகவும், தமிழனை அசுரர்களாகவும், இரக்கமற்ற அரக்கர்களாகவும் கதைகளை எழுதிச் சடங்குகளை வகுத்து, வளமான வாழ்வைத் தமக்காக்கிக் கொண்டனர்.

தமிழரின் முன்னோர்கள் வந்தேறிகளான ஆரியப் பிராமணர்களின் சுவீகாரத் தேவர்கள் ஆனார்கள். சுவீகாரம் எடுத்தவன் தத்து எடுத்தவனே!, அதைப் பாராமரிக்கும் செலவுகளை மட்டும் தமிழன் தலையில் கட்டிவிட்டு தினமும் அவன் தலையில் மிளகாய் அரைப்பது முடிகிறது?

தமிழன் செலவில் ஆடம்பரமான கோயில்கள், கோபுரங்கள் கட்டிக் கும்பாபிசேகம், திருவிழாக்கள் தினம் 6 காலப் பூசைகள், மேளதாள வான வேடிக்கைகள், போதாக் குறைக்கு யாக பூசைகள் என்று விலை உயர்ந்த உணவு வகைகள், பட்டாடைகளைத் தீயில் போட்டு எரிக்கும் கொடுமைகள் வேறு.

ஆனால் இவ்வளவு தண்டச் செலவுகளையும் தனது செலவில் செய்யும் தமிழனும், அவனுடைய தமிழ் மொழியும் தீண்டத் தகாத தீட்டு என அவனது பெயரால் நடத்தப்படும் கோயில்களுக்கு வெளியே தடுக்கப் படுகிறது. அவன் நம்பாத கடவுளை பயம் பக்தி என்ற துர்ப்போதனைகள் மூலம் அவனை அடிமைப்படுத்தி, இழிவு படுத்துவது எப்படி சாத்தியமானது?

**(வரும் தொடரில் வரும்)**





# சிவனுக்கு நீலகண்டர் என்ற பெயர் எப்படி வந்தது

சிவபெருமானுக்கு ஏற்ற விரதங்களில் ஒன்றுதான் பிரதோஷம். பிரதோஷ வழிபாடு சகல சௌபாக்கியங்களையும் தரக் கூடியது. ஒவ்வொரு மாதமும், மாதமிருமுறை அதாவது வளர்பிறையில் ஒரு பிரதோஷமும் தேய்பிறையில் ஒரு பிரதோஷம் வரும். மந்திர மலையை மத்தாக்கி, வாசுகி பாம்பை கயிறாக்கி பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் கடைந்த போது, ஆலகால விஷம் வெளிப்பட்டது. அந்த நேரத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே போட்டுவிட்டு அனைவரும் ஓட்டம் எடுத்தனர்.

திருமால், பிரம்மன் மற்றும் தேவர்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் அந்த விஷத்தை சிவபெருமான் உண்டுவிட்டார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அன்னை பார்வதி ஓடிவந்து சிவனாரின் கண்டத்தையிருகப் பற்றிட, கண்டத்திலேயே உறைந்துப் போனது ஆலகாலவிஷம். ஆலகாலத்தின் சூட்டினாலும் விடத்தின் கருநிறத்தினாலும் கண்டம் நிறமாறிட "நீலகண்டர்" என திருப்பெயர் சிவபெருமானுக்கு வந்தது.




பதினோறாம் பிறையாகிய ஏகாதசியில் அவர் உண்டார். பணிரெண்டால் பிறையாகிய துவாதசியில் காட்சி கொடுத்தார். பதிமூன்றாம் பிறையாகிய திரயோதசி மாலை

பிரதோஷ காலத்தில் நவன தரிசனம் அளித்தார். சிவபெருமான் விஷம் உண்ட நாள் சனிக்கிழமையாகும். எனவே சனி பிரதோஷம் மகத்தான சிறப்பு வாய்ந்தது. பிரதோஷ காலம் என்பது மாலை 4:30 மணி முதல் 6:00 மணி வரையாகும். இந்த காலத்தில் சிவபெருமானை தரிசிப்பது உகந்தது.



# பௌர்ணமியின் சிறப்பு

பௌர்ணமிகளில் சித்திரா பௌர்ணமி தினத்தன்று மாதத்தின் பெயரும், நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி, சித்திரை மாதத்தில் சூரியன் உச்ச பலம் பெறுகிறார். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறார். கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று சூரியன் கார்த்திகை மாதத்திலும், சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திலும் சஞ்சரிப்பார்.

அன்று சந்திரன் உச்ச பலம் பெறுவார். மற்றும் சில பௌர்ணமிகளுக்கு சிறப்புகள் உள்ளன. வைகாசி மாதம் வரும் பௌர்ணமி, விசாக நட்சத்திரத்தில் வரும். அன்று முருகக் கடவுள் அவதரித்த தினமாகும். மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமி, திருவாதிரை நட்சத்திரத்தில் வரும். அது பரமசிவனின் திரு நட்சத்திரமாகி, ஆருத்ரா தரிசனம் காண பாபங்கள் தொலைந்துவிடும்.

அன்று ஆனந்த நடனமாடுகிறார் நடராஜப் பெருமான். தை மாதத்தில் பௌர்ணமி, பூசம் நட்சத்திரத்தில் வரும். அன்று செய்யும் முருக வழிபாட்டிற்கு ஈடு இணை இல்லை. மாசி மாதப் பௌர்ணமி, மக நட்சத்திரத்தில் வரும். அன்று அம்பிகையை வழிபட, தேவியின் பூரண அருள் கிட்டும். பங்குனி மாதத்துப் பௌர்ணமி, உத்திர நட்சத்திரத்தில் வரும்.

அன்று திருச்செந்தூரில் ஐராவத மண்டபத்தில் 108 சிவலிங்கங்கள் சாட்சியாக ஸ்ரீவள்ளி-ஸ்ரீமுருகர் திருமணம் நடப்பதைப் பார்த்தவர்கள் மறுபிறவி எய்தார் என்பது உண்மை.

மேலும் பஞ்சகோசங்களில் பரமேஸ்வரனுக்கு ப்ராணமய கோசமும், பராசக்திக்கு மனோமய கோசமும் கொடுக்கப் பட்டுள்ளதை ஆராய்ச்சி செய்து பார்க்கையில் நம் வாழ்க்கையில் சூரிய சந்திரர்களின் தாக்கம், இந்தப் பார்வதி-பரமேஸ்வர வழிபாட்டினாலும், நமசிவாய என்னும் திருநாம ஜபத்தினாலும், லலிதா சஹஸ்ரநாம பாராயணத்தினாலும் பெருமளவு நலம் சேர்க்கும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

அக்ஷய திருதியை போலவே இந்த நாளிலும் தானங்கள் செய்வது நன்மை தரும் என்று கருதப்படுகிறது.

நட்சத்திரங்கள் இருபத்தி ஏழில், சில நட்சத்திரங்கள் இறைவனுக்கு உகந்த நட்சத்திரங்களாகவும், இறைவன் அவதாரம் எடுத்த நட்சத்திரங்களாகவும் கருதப் படுகின்றது. அந்த அடிப்படையில் வைகாசி மாதம் வரும் விசாகம் நட்சத்திரம் வடிவேலனுக்கு உகந்த நட்சத்திரமாக பக்தர்கள் அனைவராலும் கொண்டாடப் படுகிறது.

அன்றைய தினம் வேலனை வழிபட்டால் வெற்றிகள் வந்து சேரும். குமரனை வழிபட்டால் குறைகள் அகலும். கார்த்தி கேயனை வழிபட்டால் கவலைகள் பறந்தோடும். கந்தப்பெருமானை வழிபட்டால் கை நிறையப் பொருள் குவியும். அள்ளிக் கொடுப்பதற்கு கரங்கள் அதிகமாக உள்ள தெய்வமாகவும், கூப்பிட்டதும் பறந்து வந்து உதவி செய்ய மயில் வாகனம் வைத்திருப்பதாலும் முருகப் பெருமான் மீது மக்கள் அளவிற்கு அதிகமாக பக்தி வசப்பட்டுள்ளனர்.

அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்பையா என்றும், பழத்திற்காக போட்டியிட்டு பழநி மலையில் குடி கொண்டவன் என்றும், சூரபத்மனை போராடி வெற்றி கொண்ட சத்ரு சம்ஹாரனாகவும் மக்கள் நினைத்து வழிபடும் மகத்தான தெய்வம் முருகக் கடவுள் ஆவார்.

**‘காவடிகள் உன்னைத் தேடி ஆடி வரும்!**

**கால்நடையாய் பக்தர் கூட்டம் கோடிவரும்!**

**சேவடியே சரணம் என வாழ்பவர்க்கே**

**செல்வநலம் தந்தருள்வான் கந்தவேலன்!’**

என்று கந்தன்பதிகம் எடுத்துரைக்கின்றது. அப்படிப்பட்ட தெய்வத்தை வழிபட நமக்கு வைகாசி விசாகம் வழிகாட்டுகின்றது.

# வெற்றிகளை வழங்கும் வைகாசி விசாகம்





# திருக்கழுக் குன்றம் ஒரு பார்வை!

பல நூற்றாண்டுகளாக 2 எகிப்திய வகைக் கழுகுகள் தினமும் நண் பகல் நேரத்தில் திருவண்ணா மலையை வலம் வந்து, பூசகர் கையால் பொங்கல் பிரசாதம் சாப்பிட்ட பின்னர், அருகே உள்ள கிண்ணத்தில் உள்ள தண்ணீரில் வாயை கழுவி விட்டு, பறந்து போய் விடும் காட்சியை ஆயிரக் கணக்கான மக்கள் பார்த்துப் பரவசம் அடைவர். ஆனால் 1998 முதலாக அவை வருவது நின்று விட்டது.

இந்த இரு கழுகுகளும் பற்றிப் பல கதைகள் உள்ளன. அவற்றுள், சிவனால் இரு முனிவர்கள் கழுகுகளாகச் சாபம் கொடுக்கப் பட்டனர் எனவும், சாப விமோசனம் பெற தினமும் கங்கையில நீராடிய பின்னர் இக்கழுகுகள், நண்பகலில் திருக் கழுக்குன்றத்தில் சிவ தரிசனம் செய்து, திரு அமுதுண்டு, மாலையில் இராமேஸ்வரம் சென்று தரிசனம் செய்த பின்னர், இரவில் சிதம்பர தரிசனம் செய்வதாக நம்பப்பட்டது.

வேதகிரி வேதாசலம் எனப்படும் திருக் கழுக்குன்ற மலை 265 ஏக்கர் பரப்பு அளவும், 500 அடி உயரமும் கொண்டுள்ளது. உச்சியைச் சென்றடைய 562 நன்கு வடிவமைக்கப்பட்ட படிகள் பக்தர்கள் பாவனைக்கு உள்ளன. மலை உச்சியில் உள்ள கோயிலின் மூலவர் சுயம்பு

லிங்கமாக, சிவனாக வேத கிரீஸ்வரர் என வணங்கப் படுகிறார்.

மலை அடிவாரத்தில் ஒரு தளமும், மலை உச்சியில் ஒரு தளமுமாக இரண்டு தளங்களை இக்கோயில் கொண்டு விளங்குகிறது. கீழ் தளம் பக்தவத்சலேஸ்வரர் கோயில் என அழைக்கப் படுகிறது. திருவண்ணாமலைக் கோயிலைப் போன்று நான்கு உயரமாக கோபுரங்களுடன் இதன் அமைப்பு காணப் படுகிறது.

10 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த மலை அடிவாரக் கோயிலைச் சுற்றிலும் பல தீர்த்தங்கள் உள்ளன. பழங் காலத்தில் திருக் கழுகுக் குன்றம் என அழைக்கப்பட்ட இக் கோயில் இப்பொழுது திருக்கழுக் குன்றம் எனச் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இது உள்ள ஊரை பட்சி தீர்த்தம் என்கின்றனர்.

இந்தக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. உருத்திர கோடி புரி, நந்தி புரி, இந்திர புரி, நாராயண புரி, பிரம்ம புரி, தினகர புரி, முனிகண புரி என்ற பெயர்களாலும் இத்தலம் முற்காலங்களில் அழைக்கப் பட்டதாகத் தெரிகிறது. கோயிலின் உட்புறத்தில் பாறைச் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் சொக்க நாயகியும், விநாயகரும் நடனம் ஆடும் காட்சி உள்ளது.

புராணக் கதைகளின்படி பரத்துவாச முனிவர் சிவனை நோக்கித் தவம் செய்தார் எனவும், சிவனிடம் இருக்கு, யசுர், சாம வேதங்களை முற்றிலுமாகத் படித்துத் தெரிந்து கொள்ள, நீண்ட ஆயுளைத் தருமாறு வரம் கேட்டராம்.

அதற்குச் சிவபெருமான் மூன்று கைப்பிடி மண்ணை எடுத்து, 3 மலைகளைத் தோற்றுவித்தார். மேலும், 'பரத்துவாசரே! நீ படிக்க வேண்டிய வேதம் இந்த 3 கைபிடி அளவு மண்களும்தான். எவ்வளவு காலம் வாழ்ந்து இடைவிடாது படித்தாலும், மோட்சத்துக்கான மூலத்தை நீ காண முடியாது. கலியுகத்தில் பக்தி





கழுகுகள் அமுது செய்யும் காட்சி

வழி ஒன்றுதான் இலகுவான இறுதியான மோட்சத்தை தரும் என்றார்'

இந்தக் கழுகுகள் தொடர்பாக அநேகமாக எல்லாச் சென்னைப் பத்திரிகைகளிலும் 17.06.1921ல் வெளியான இச்செய்தி ஆச்சரியம் தருகிறது.

இதுதான் அந்தச் செய்தி:-

17.06.1921 காலை 9 மணி அளவில் 2 கழுகுகள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் காணப்பட்டன. அவற்றை உடனடியாகப் படம் பிடித்து, அந்தப் படங்கள் திருக் கழுக் குன்றக் கோயில் ஆதீனத்துக்கு பின் வரும் கடிதத்துடன் அனுப்பப் பட்டது.

"இரண்டு கழுகுகள் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பொற்றாமரைக் குளத்தில் நீராடி, 2 மணிநேரம் அருகில் உள்ள மண்டபத்தில் ஓய்வு எடுத்த பின்னர் சென்று விட்டன. 10.30 மணி அளவில் படம் எடுக்கப் பட்டது. இங்கு உள்ளவர்கள் அவை தினமும் திருக்கழுக் குன்றம் செல்கின்ற



கழுகுகள் போன்று காணப்படும் கழுகுகள் என்று சொல்கிறார்கள்.

நான் உங்களைத் தயவாகக் கேட்டுக் கொள்வது என்ன வென்றால்? படத்தின் உள்ள கழுகுகள், தினமும் உங்கள் கோயிலில் பார்க்கும் கழுகுகள் தானா...? அவை வழமையான நேரத்தில், உங்கள் இடத்தில், இதே நாளில் காணப் பட்டனவா....? என அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருக் கழுக்குன்ற ஆதீன கரத்தா பின் வரும் பதிலை அனுப்பி உள்ளார். அவரும், அவரைப் போன்ற பலரும் படத்தில் காணப்பட்ட கழுகுகள் திருக் கழுக்குன்றப் புனித கழுகுகளும் ஒன்றே! என அடையாளம் கண்டுள்ளதாக பதில் கொடுத்துள்ளார்'



இந்த அதிசயக் கழுகுகள் ஏன் இப்படி நடந்து கொண்டன? அவை இப்போது எங்கே? எப்படி உள்ளன?. இவைக்கு மட்டும் இப்படியான பழக்கம் ஏன் ஏற்பட்டது?

அண்மையில் இந்தியத் தமிழ் தொரைக் காட்சி ஒன்றில், கோயில் அம்மன் மூல உருவத்தில் பச்சைக் கிளி ஒன்று மிக அமைதியாக நடமாடி, கைகளில் ஏறி அமர்ந்து காட்சி கொடுத்தது. கடவுளர்கள் இருக்கின்றனவா...? இல்லையா....? என்கிற பகுத்தறிவு வாதங்களின் மத்தியில் இக்காட்சிகள் கடவுள் என்பது மனித மன ஆராட்சிகளுக்கு அப்பாற் பட்டது என்பதை யாரால் மறுக்க முடியும்?

# சித்திரா பௌர்ணமியின் சிறப்பு

மாதம் தோறும் தான் பௌர்ணமி வருகிறது. சித்திரைமாதப் பௌர்ணமியில் அப்படியென்ன சிறப்பு? சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரம்கூடி வரும் பௌர்ணமி நாள் சித்திரா பௌர்ணமி நாளாகும். இது வசந்தகாலம். காலங்களில் நான் வசந்தகாலமாக இருக்கிறேன் என்று கண்ணன் பகவத்கீதையில் கூறுகிறார். இவ்வசந்த காலத்தில் தான் பெரும்பாலும்

ஆலயங்களில் பிரம்மோற்சவம் (திருவிழா) நடைபெறுகிறது. அடுத்தடுத்து தானதர்மங்கள் செய்ய அக்ஷய திருதியை, சித்திரா பௌர்ணமி என்று எவ்வளவு புண்ணிய நாட்கள்!

வானமண்டலத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை திதி என்கிறோம். அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி கொடுப்பதும், (அன்று சூரிய சந்திரர்கள் ஒரே டிகிரியில் இணைந்திருப்பார்கள்.) பௌர்ணமியன்று சிறப்பான பூஜைகள், வழிபாடுகள் செய்வதும் சிறந்தது.



# ஈசனால் கண்பார்வை பெற்ற தண்டியடிகள்

திருவாரூரில் அவதரித்தவர் தண்டியடிகள் நாயனார். இவர் பிறவியிலேயே கண்பார்வை இல்லாதவர். தன் அகக் கண்ணினால் ஈசனை நினைத்தபடி, அவனது நாமத்தை உச்சரித்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். தினமும் சிவாலயத்தை வலம் வந்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தபடி இருந்தார். கோவில் மேற்புறம் உள்ள திருக்குளத்தின் அருகில் சமணர்கள் பலர் இருந்தனர். அவர்கள் திருக்குளத்தை கண்டு கொள்ளாததால், அது பழுதுபட்டுக் கிடந்தது.

இதனை அறிந்த தண்டியடிகள், அந்த திருக்குளத்தை தூர்வாரும் திருப்பணியைச் செய்ய எண்ணினார். குளத்தின் நடுவில் ஒரு கம்பும், குளக்கரையின் மேட்டில் ஒரு கம்பும் நட்டு, இரு கம்புகளிலும் ஒரு கயிறு கட்டினார். அந்தக் கயிற்றை தடவியபடியே குளத்தில் இறங்கி மண்ணை ஒரு கூடையில் எடுத்து, கரை மேட்டில் கொட்டும் பணியைச் செய்தார். அவ்வாறு பணி செய்யும்போது, பஞ்சாட்சரத்தை அவரது உதடுகள் உச்சரித்துக் கொண்டே இருந்தது.

பல காலமாக தண்டியடிகள் செய்து வந்த இந்தத் திருத்தொண்டின் காரணமாக திருக்குளத்தில் தண்ணீர் பெருகத் தொடங்கியது. இதனைக் கண்டு பொறாமையுற்ற சிலர், அங்கு வந்து அந்தத் திருப்பணியை நிறுத்தும்படி தண்டியடிகளிடம் வலியுறுத்தினர்.

ஆனால் தண்டியடிகள் நாயனாரோ, "இது திருநீற்றையே சாந்தமாக எண்ணிப் பூசும் சிவபெருமானுக்கு உரிய திருப்பணி. இதன் பெருமையை நீங்கள் அறியமாட்டீர்கள்" என்றார். இதனால் மேலும் கோபமுற்ற அவர்கள், "நாங்கள் கூறும் வார்த்தைகளை நீ கேட்க மாட்டாயா?. உனக்கு கண்தான் இல்லையென்றால், காதையும் இழந்துவிட்டாயா?" என்று ஏளனம் செய்தனர்.

அதற்கு தண்டியடிகள், "நான் ஈசனின் திருவடியைத் தவிர ஒன்றையும் காணவில்லை. மந்தமான மதியும், காணாக் கண்களும், கேளாச் செவியும் உங்களுக்குத்தான் உள்ளன. சிவபுண்ணியத்தின் திறனை நீங்கள் அறியவில்லை. சிவபெருமானின் திருவருளால், உலகமெல்லாம் அறியும்படி என் கண் காணவும், உங்கள் கண்கள் குருடாகவும் பெற்றால் என்ன செய்வீர்கள்?" என்றார்.

இந்தக் கேள்வியால் அதிர்வுற்ற எதிராளர்கள், "அப்படியொரு நிகழ்வு

நடந்தால், நாங்கள் இந்த ஊரிலேயே இருக்க மாட்டோம்” என்று சூளுரைத்தனர். அத்துடன் நில்லாமல், தண்டியடிகள் கரத்தில் இருந்த மண்வெட்டியையும், கூடையையும் பறித்து, குழித்தறிகளையும் பிடுங்கி எறிந்தனர்.

இதனால் மனம் நொந்து போன தண்டியடிகள் நாயனார், திருக்கோவிலின் முன்பாக நின்று, “ஐயனே! உனக்கு நான் செய்த திருப்பணியையும், உன்னையும் அவமானம் செய்தவர்களால், அடியேன் வருந்துகிறேன். எல்லாம் அறிந்த நீயே, இந்த இடரை நீக்கி அருள்புரிதல் வேண்டும்” என்று ஈசனிடம் வேண்டி தன் இருப்பிடம் சென்று கண்ணுறங்கினார்.

அன்றிரவு நாயனாரின் கனவில் தோன்றிய ஈசன், “அன்பனே! நீ உன் மனதில் உள்ள கவலையை விடுக! நாளைக்கு உன் கண்கள் ஒளிபெறும். சிவதொண்டு எதிர்ப்பாளர்கள் கண்ணொளி இழப்பார்கள் அஞ்சாதே!” என்று அருளிச்செய்து மறைந்தார்.

பின்னர் சோழமன்னனின் கனவிலும் தோன்றிய சிவபெருமான், “மன்னனே! தண்டி என்னும் எமது அன்பன் எமக்கு குளம் தோண்டும் பணியை செய்து வந்தான். அவனது பணிக்கு சிலர் இடர் செய்தார்கள். நீ அவனிடம் சென்று அவன் கருத்தை முடிப்பாய்” என்றார்.



சோழ மன்னன் கண்விழித்து எழுந்தான். இறைவனின் கருணையை எண்ணி உள்ளம் உருகினான். அதிகாலையிலேயே தண்டியடிகளிடம் வந்து, அவரைப் பணிந்து, தான் கண்ட கனவு பற்றி எடுத்துரைத்தான். என்ன நடந்தது என்பதையும் தண்டியடிகளிடம் கேட்டு விவரம் அறிந்தான். திருக்குளம் தோண்டத்

தொடங்கியது முதல், எதிர்ப்பாளர்களால் தனக்கு நேர்ந்த இடர் வரை அனைத்தையும் மன்னனிடம் கூறினார் தண்டியடிகள். அரசன், திருக்குளத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை அழைத்து நடந்த சம்பவம் பற்றி விசாரித்தான்.

மேலும் ஈசனை வேண்டி தண்டியடிகள் கண் பெற்று விட்டால், தாங்கள் அனைவரும் இந்த ஊரை விட்டு சென்று விடவேண்டும் என்றும் உத்தரவிட்டான். அதற்கு எதிர்ப்பாளர்களும் இசைந்தனர். தண்டியடிகள் திருக்குளத்தை நோக்கிச் செல்ல, மன்னனும் மற்றவர்களும் பின்னே சென்றனர். அனைவரும் திருக்குளக்கரையை அடைந்தார்கள். மன்னன் தண்டியடிகளைப் பார்த்து, “நீ கண் பெறுமாறு காட்டும்” என்றான்.

தண்டியடிகள், “சிவபெருமானே பரம்பொருள். அவருடைய அடியவனாக நான் இருப்பது உண்மையானால், உலகத்தார் முன்னே என் கண்கள் ஒளிபெறட்டும். ஈசன் எதிர்ப்பாளர்கள் கண்கள் ஒளி விலகட்டும்” என்று கூறி ஐந்தெழுத்தை ஓதி திருக்குளத்தில் மூழ்கினார். அவர் எழுந்தபோது அவரது கண்கள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. அனைவரும் இறைவனின் கருணையை எண்ணி ஆனந்தித்தனர். அதே வேளையில் எதிர்ப்பாளர்களது கண்கள் ஒளி இழந்து போயின. அதனால் அவர்கள் வருத்தம் கொண்டு கலங்கி நின்றார்கள்.

அவர்களை நோக்கி, “நீங்கள் ஒப்புக்கொண்டபடி இந்த ஊரை விட்டு செல்லுங்கள்” என்று மன்னன் உத்தரவிட்டான். கண்களை இழந்த எதிர்ப்பாளர்கள் அனைவரும் தங்கள் நிலையை எண்ணி வருந்தியபடி அங்கிருந்து புறப்பட்டார்கள். தொடர்ந்து மன்னன் திருக்குளத்தையும், அதன் கரையையும் புதுப்பித்தான். தண்டியடிகள் மலரடியை பணிந்து வணங்கினார்.

திருவருளையே சிந்தித்து, ஐந்தெழுத்தை இடையறாது நினைத்து, திருப்பணியின் குறையை நிறைவு செய்ததன் காரணமாக முடிவில் முக்தியை எய்தினார் தண்டியடிகள் நாயனார்.


ஆலயங்களுக்கான அறிவித்தல்!



‘அகரதீபம்’ இதழை பெற்றுக் கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11



# மனித மனத்தின் மீது அமாவாசை, பௌர்ணமி திதிகளின் தாக்கம்

அமாவாசை, பௌர்ணமி அன்று நிகழும் ஆகர்ஷண சக்தியின் வேறுபாடுகள் மனித மன இயல்புகளில் பெரும் மாறுதல்களை உண்டாக்குகின்றன என்பதை மருத்துவம் ஏற்றுக் கொள்கிறது. இந்தக் காலங்களில் மன நோயாளிகளின் நடத்தையில் மாற்றங்கள் உண்டாகின்றன.

மேலும் ஜாதகத்தில் சூரிய சந்திரர்கள் பாதிக்கப் பட்டிருப்பவர்களுக்கு சித்தப்பிரமை, மன அழுத்தம், ஹிஸ்டீரியா போன்றவைகள் உண்டாவதையும் அனுபவ ரீதியாகக் காண்கிறோம். இதற்கு ஜோதிடத்தின் மூலமாக காரணங்களைத் தேடுங்கால், சூரியனை ஆத்மகாரகன் என்றும், சந்திரனை மனோகாரகன் என்றும் நமது புராதன நூல்கள் குறிப்பிடுவதன் மகத்துவம் புரிகிறது.

நமது ஆத்ம பலம் பெருகினால்தான் நம்மால் இந்த உலகில் சிறப்புடன் வாழ முடியும். கடவுளைத் தேடும் ஆற்றலும் உண்டாகும். அதாவது ஆன்மீகத்தின் மூலமாக ஆத்மபலத்தைப் பெற, இத்தகைய ஜாதக அமைப்பு உதவுகிறது. ப்ராணாயாமம், யோகா போன்றவற்றிற்கு சூரிய பகவானின் அனுக்கிரகம் அவசியம் தேவை. ஆத்மபலம் மேம்பட, மனதின் சக்தி அவசியம். மனம் வசப்பட உன்னை உணர்வாய் என்பது பெரியோர் வாக்கு. அப்படிப்பட்ட மனதை நிர்ணயிப்பவர் சந்திர பகவான். அதனால்தான் சூரிய சந்திரர்களின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதால், வசிய சக்திகளைப் பெறும் ஆற்றல் உண்டாகிறது.

# உண்மையான சன்யாசி யார்?

## பிள்ளையார் நடத்திய நாடகம்



பர்தஹாரி என்பவர் மகாப் பெரிய கவிஞர், சமிஸ்கிருத வல்லுனர். நிதி சாகரா, ஸ்ரிங்கார சாதகா, வைராக்ய சாதகா மற்றும் சுபாசிதஸ் போன்ற நூல்களை இயற்றியவர். பாடலிபுரத்தை சேர்ந்த வித்யாசாகரா என்ற அறிஞரின் மகன். வித்யாசாகரா என்ற அறிஞ்சர் பாடலிபுரத்தை ஆண்டு வந்த மன்னனின் அரச சபையில் இருந்தவர். அந்த மன்னன் மரணம் அடைந்தப் பின் வித்யாசாகரா அந்த நாட்டின் ஆட்சி பொறுப்பை ஏற்றார்.

வித்யாசாகராவின் மரணத்திற்குப் பிறகு அவருடைய மகனான பத்ரஹரி மன்னனாக பதவி ஏற்றார் (பத்ரஹரியை மன்னன் விக்ரமாதித்தனின் சகோதரர் என்பார்கள்). மரணம் அடைய இருந்த தந்தைக்கு பத்ரஹரி திருமணம் ஆனாலும், தான் எந்த சந்ததியையும்

உருவாக்க மாட்டேன் என ஒரு சத்தியம் செய்து கொடுத்தார்.

அதற்கேற்ப அவர் மூன்று மனைவிகளுடன் வாழ்ந்து கொண்டு இருந்தாலும், எந்த வாரிசும் அவர் மூலம் உருவாகவில்லை. அதே நேரத்தில் பத்ரஹரியும் ஆன்மீக மனம் கொண்டவர். ஆகவே அவர் சாதுக்கள் சன்யாசிகளுடன் தனது பெரும்பாலான நேரத்தை அவர்களுடன் விவாதம் செய்து செலவழித்தவர் .

ஒரு முறை அவருக்கு ஒரு பெரிய மகான் மகிமை வாய்ந்த மாம்பழத்தைக் கொண்டு வந்து தந்து 'அப்பனே இந்தப் பழம் மிகவும் விசேஷமானது. இதை உண்டால் மூப்பு (வயதான தோற்றம்) வரவே வராது. என்றுமே நீ இளமையாக இருப்பாய். ஆகவே குளித்து விட்டு இன்று இதை நீ உண்ணலாம்" என்று கூறிவிட்டுச் சென்றார். அதன் பின் அவரைக் காணவில்லை.

பர்தஹரி நினைத்தார் "இந்தப் பழத்தை உண்டு விட்டு நான் இளமையாக இருந்து என்னப் பயன்?. என் மனைவி வயதாகி இறந்து விடுவாள். அவள் இறந்தப் பின் நான் உயிருடன் இருந்து என்னப் பயன்? ஆகவே நான் இதை உன்னுவதைவிட எனக்கு துணையாக இருக்கும் அவள் இதை உண்டு விட்டு வெகுக் காலம் வாழட்டும்". என என்னினார்.

மனைவி வந்தவுடன் அந்தப் பழத்தின் மகிமையைக் குறித்து அவளிடம் கூறி விட்டு, அதை உண்ணுமாறு அவளுக்குக் கொடுத்தார். 'சரி குளித்தப் பின் அதை நான் சாப்பிடுகிறேன்' என பழத்தை எடுத்துச் சென்றவள் நினைத்தாள், 'அடடா... இதை என்னுடைய காதலனுக்குக் கொடுத்தால் அவன் இளமையாக இருந்து, நம்மை இன்னமும் இன்பமாக அல்லவா வைத்து இருப்பான்?" என்று எண்ணினாள்.

அவளுக்கு அந்த அரண்மனையில் குதிரை லாயத்தில் இருந்த ஆஜானுபாகுவான வேலைக் காரனுடன் கள்ளத் தொடர்ப்பு இருந்தது. அதற்குக் காரணம், பத்ரஹரி அவர் தந்தையிடம் ஒரு வாரிசை தான் உருவாக்க மாட்டேன் என வாக்குக் கொடுத்து இருந்ததினால், இல்லற சுகங்களில் அதிகம் ஈடுபடாமல் இருந்தார்.

அதனால் இளமைக் காலத்தில் இருந்த ராணி, தனது உடல் சுகத்திற்காக அரசனுக்குத் தெரியாமல் கள்ளத் தொடர்ப்பை வைத்து இருந்தாள். ஆகவே, அந்தப் பழத்தை எடுத்துச் சென்றவள் கள்ளத் தொடர்ப்பை வைத்து இருந்த வேலைக்காரனை அழைத்து அந்தப் பழத்தின் மகிமையைக் கூறி அதை உண்ணுமாறுக் கூறினாள்.

அரண்மனையில் வேலை செய்வதினால் தன் உடல் மீது வெறி கொண்டு அலைந்த ராணி, உல்லாசத்திற்கு கூப்பிடும்போது, வேறு வழி இல்லாமல் அவளிடம் மறுக்க முடியாத நிலையில், அவன் இருந்தாலும் தன்னுடைய மனைவியிடம் அதிக ஆசை வைத்து இருந்தவன் 'சரி அதை நான்

சாப்பிடுகிறேன்" என எடுத்துச் சென்றான்.

அதை கொண்டு சென்றவன் நினைத்தான், 'அடடா... இதை என் மனைவிக்குக் கொடுத்தால் அவள் என்றும் இளமையாக இருந்து, என்னை மகிழ்விப்பாளே!". என்று குதிரை லாயத்துக்கு உணவு எடுத்து வந்த தன் மனைவியிடம் அந்தப் பழத்தின் மகிமையை பற்றிக் கூறி, குளித்து விட்டு அவளை உண்ணுமாறுக் கூறி அனுப்பினான்.

இப்படியாக ஒருவர்மாறி இன்னொருவர் என கைமாறி வேலைக்காரியிடம் சென்ற அந்த மகிமை வாய்ந்தப் பழத்தைப் பத்திரமாக எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, வழியில் மாறு வேடத்தில் நகர் வலம் வந்து கொண்டு இருந்த மன்னன் பத்ரஹரி, அவள் கையில் இருந்த பழத்தை அடையாளம் கண்டு கொண்டு, ஒன்றும் தெரியாதவர் போல அவளிடம் சென்று அது என்ன? என்றும், அவளுக்கு எப்படி அது கிடைத்தது? என்பதையும் கேட்டறிந்தவுடன், கோபம் அடைந்து, அரண்மனைக்குச் சென்றான்.

குதிரை லாயத்தில் வேலை செய்து கொண்டு இருந்த வேலைக் காரனை அழைத்து அந்தப் பழத்தை அவனுக்குத் தந்தது யார்? எனக் கோபத்துடன் கேட்க, அந்த வேலைக் காரனும் ராணியுடன் தனக்கு இருந்த கள்ளத் தொடர்ப்பைக் குறித்துக் கூறாமல் அதை மறைத்து விட்டு,



அந்தப் பழத்தை அவருடைய மனைவியான மகாராணியே தனக்கு தந்ததாக சத்தியம் செய்து கூறினான்.

ஆகவே மன்னன் தனது மனைவியையும் அழைத்து அது பற்றி பேச விரும்பினான். ஆனால் வேலைக்காரனை அழைத்து மன்னன் விசாரித்ததை ஒளிந்து கொண்டு பார்த்துக் கொண்டு இருந்த ராணியும், எங்கே தன்னுடைய கள்ளக் காதல் தெரிந்து விடுமோ? என பயந்து கொண்டு, அவனுக்கு விஷம் கலந்த உணவை செய்து, அதைக் கொண்டு போய் அவனிடம் கொடுத்து 'நாதா... இன்று உணவு தயாரிக்க அதிக நேரம் ஆகும் என்கிறார்கள்.

ஆகவே இதை தற்காலிகமாக உண்டுவிட்டு படுத்துக் கொள்ளுங்கள். பட்டினியுடன் இருப்பது வயிற்றுக்கு நல்லது அல்ல" என இனிமையாகப்

பேசி விட்டு, அவன் மேலே எதையும் கேட்கும் முன்னரே விடுக்கென வெளியில் சென்று விட்டாள். ஆனால், பர்த்ஹரிக்கு அவள் மீது சந்தேகம் எழுந்தது. அவள் ஏன் வேலைக் காரனுக்கு அந்த மகிமை வாய்ந்த பழத்தைக் கொடுக்க வேண்டும்? அவனுக்கும், இவளுக்கும் என்ன தொடர்ப்பு இருக்க முடியும்? மேலும், என்றும் இல்லாமல் இன்று ஏன் அவசரம் அவசரமாக உணவை தந்து விட்டுச் சென்றாள்?

யோசனை செய்தவன் கண்களை மூடியபடி பிரார்த்தனை செய்தபோது, அது விஷம் கலந்த ரொட்டியே என்பது அவன் மனக் கண்ணில் தெரிந்தது. ஆகவே இனியும் தகாத மனைவியுடன் இருந்து கொண்டு உயிர் வாழ்வதை விட, வாழ்கையின் நான்கு அம்சங்களில் ஒன்றான சன்யாச வாழ்க்கையை ஏற்பதே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார்.

யாருக்கும் தெரியாமல் அந்த ரொட்டியை அறையின் மேல் பகுதியில் வைத்து விட்டு, அரண்மனை வேலைக் காரனைப் போல மாறு வேடம் அணிந்து கொண்டு, ஒரு பிட்சைப் பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு, அரண்மனையை விட்டு வெளியேறி விட்டான்.

## வைரவரின் உடலில் 12 ராசிகள்...!



படைத்தல், காத்தல், அழித்தல் அதாவது ஒடுக்குதல் ஆகிய முக்கிய இறையருள் தொழில்களை செய்து பல லட்ச உயிர்களையும் காப்பதால் அவருக்கு திரிசூலம் அதிகார ஆயுதமாக அளிக்கப்பட்டது. படைத்தல் தொழிலை உடுக்கையும், காத்தல் தொழிலை கையில் உள்ள கபாலமும், அழித்தல் தொழிலை உடலில் பூசிய விபூதியும் குறிக்கும். எந்தவித பூஜைகள் செய்யா விட்டாலும் கூட இக்கட்டான நேரத்தில் முழு மனதுடன் அவரை நினைத்தாலே கூட போதும்.

ராகு-கேது எனப்படும் பாம்புகளை பூனூலாகத் தரித்திருப்பவர் பைரவர். மேலும் சந்திரனை சிரசில் வைத்தும், சூலம், மழு, பாசம், தண்டம் ஏந்தியும் காட்சி தருவார். காலத்திற்கு அதிபதியான, காலத்தின் வடிவமான பைரவரின் திரு உருவத்தில் 12 ராசிகளும், அவற்றிற்குரிய நட்சத்திரங்களும் அடங்கியிருப்பதாக சொல்லப்படுகிறது.

தலை - மேஷ ராசி, வாய் - ரிஷப ராசி, கை - மிதுன ராசி, மார்பு - கடகம், வயிறு - சிம்மம், இடை - கன்னி, புட்டம் - துலா ராசி, லிங்கம் - விருச்சிகம், தொடை - தனுசு ராசி, முழந்தாள் - மகரம், காலின்கீழ் பகுதி - கும்பம், பாதம் - மீன ராசி என்று சாஸ்திர, ஜோதிட நூல்கள் சொல்கின்றன.

போகும் முன் இந்த 'ஓட்டப்பம் இந்த வீட்டை சுட்டும்" என்று சபித்து விட்டுச் சென்று விட, அவன் அரண்மனையை விட்டு வெளியேறியதுதான் தாமதம், அரண்மனை பற்றி எறிந்து விட, அதில் இருந்த அவனுடைய மனைவி மற்றும் கள்ளக் காதலன் போன்ற அனைவரும் இறந்து விட்டார்கள்.

அரண்மனையில் இருந்து வெளியேறிய பத்ரஹரி சன்யாசக் கோலம் பூண்டு, இனி பிட்சை எடுத்துதான் உண்ண வேண்டும் என்ற வைரகியத்துடன் தென் இந்தியப் பகுதியை நோக்கிச் சென்றார். அங்கு சென்றவர் பிள்ளையார் கோவில் வாயிலில் (எந்த ஊர் என்பது தெரிய வில்லை. ஆனால் அது பிள்ளையார் பட்டி என்கிறார்கள்) அமர்ந்து கொண்டு பிட்சை எடுத்து உண்ட வண்ணம் வாழ்கையைக் கழித்தார்.

அந்த ஆலயத்துக்கு இரண்டு நுழைவாயில்கள் உண்டு. அப்போது ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் பர்தஹரி அமர்ந்து இருந்த வாயிலுக்கு அடுத்த வாயிலில் சென்று பிச்சை எடுக்கலானான். அப்போது அவன் எதிரில் வந்த ஒருவர் பர்தஹரியிடம் சென்று தானம் கேட்குமாறு கூறி, அவனை அங்கு அனுப்பினார்.

அந்த பிச்சைக்காரனும் சன்யாசிக் கோலத்தில் இருந்த பர்தஹரியிடம் சென்று 'வயதான ஒருவர் என்னிடம் வந்து உங்களிடம் தானம் கேட்குமாறு அனுப்பினார்" என்று சொன்னதும், பர்தஹாரி ஒரு கணம் யோசனை செய்தார் 'நானே பிட்சை எடுத்து உண்ணுகையில் இவனுக்கு என்ன தானம் செய்ய முடியும்?" அடுத்த கணம் அவர் மனதில் தோன்றியது 'ஓஹோ... அரண்மனையில் இருந்து எடுத்து வந்துள்ள இந்த பிட்சைப் பாத்திரத்தையும் துறக்க வேண்டிய அவசியம் உள்ளதோ? என்று எண்ணியவர் 'அப்பனே!, என்னிடம் தானம் தர இது ஒன்றுதான் உள்ளது. இந்தா இதை எடுத்துக் கொள்!." எனக் கூறி விட்டு அந்த பாத்திரத்தையும் கொடுத்து விட்டார்.

அந்த பிச்சைக்காரன் சிரித்துக் கொண்டே அதை வாங்கிக் கொண்டு சென்றான். அவன் சென்றப் பின்தான் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது, அனைத்து நாடகத்தையும் அங்குள்ள பிள்ளையார் மனித உருவில் வந்து நிகழ்த்தி உள்ளார். ஒரு சன்யாசிக்கு சொந்தமாக எதுவுமே இருக்கக் கூடாது.

அதாவது உலகப் பொருட்கள் அனைத்தையும் துறந்து, மனதை நிர்வாணமாக வைத்துக் கொண்டு இருக்க வேண்டும் எனும் போது, அரண்மனையில் இருந்து கொண்டு வந்திருந்த பிட்சை பாத்திரத்தை வைத்திருக்கலாமா?. அதனால்தான் அந்த தத்துவத்தைப் புரிய வைக்கவே பிள்ளையார் அந்த நாடகத்தை நடத்தி உள்ளார்.

அன்று முதல் பர்தஹாரி கையேந்தி பிட்சைப் பெற்றுக் கொண்டு கிடைத்ததை உண்ட வண்ணம் அங்கேயே வாழ்ந்து கொண்டு இருந்தார். அங்கு இருந்த போதுதான் அவர் மேலே குறிப்பிட்டுள்ள நூல்களை இயற்றினார் என்கிறார்கள்.

# வைகாசி விசாகம்



முன்னொரு சமயம் உமையம்மை சிவபக்தனான தட்சனின் மகளாக தாட்சாயணி என்னும் நாமத்துடன் அவதரித்தாள். சிவனை மருமகனாகப் பெற்ற கர்வத்தினால் தட்சன் யாகம் ஒன்றை நடத்தினான். யாகத்திற்கு சிவனைத் தவிர்த்து ஏனையோரை அழைத்திருந்தான். இதனால் சினமுற்ற உமையம்மை தாட்சாயணியாக இருக்க விருப்பமில்லை என சிவனிடம் தெரிவித்தாள்.

அப்போது இறைவன் பர்வத ராஜனின் வேண்டுகோளுக் கிணங்க பார்வதி என்ற திருநாமத்தோடு பர்வத ராஜனின் மகளாக அவதரிக்குமாறு அருளினார்.

இச்சமயத்தில் சூரபத்மன் என்ற அசுரன் சிவனிடமிருந்து, சிவனுக்கு இணையான சிவ அம்சக் குழந்தையால் தான் தனக்கு அழிவு வேண்டும் என்ற வரத்தினை பெற்றான். சிவனை அழைக்காத யாகத்திற்குச் சென்றதால் தேவர்கள் அனைவரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசூரன் ஆகிய அசுர சகோதரர்களின் துன்பத்திற்கு ஆளாயினர்.

அவர்கள் தங்கள் துயரம் தீர சிவபாலனின் அவதாரம் தான் தீர்வு என்று எண்ணி சிவனைப் பார்க்கச் சென்றனர். அப்போது சிவன் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். பார்வதியும் சிவனை நினைத்து தவம் புரிந்து கொண்டிருந்தாள். தேவர்கள் சிவனின் தியானத்தைக் கலைக்கும்படி மன்மதனை வேண்டினர்.

மன்மதன் சிவனின் தவத்தை கலைக்க முற்படுகையில் சிவன் தனது நெற்றி கண்ணைத் திறந்து மன்மதனை



சாம்பலாக்கினார். சிவபார்வதி திருமணத்திற்குப் பின் சிவக்குமாரன் தோன்றுவான் என்று அருளினார். பார்வதி பரமேஸ்வர் திருமணம் பங்குனி உத்திரம் நாளில் நடந்தேறியது.

நாட்கள் ஆகியும் சிவக்குமாரன் தோன்றாததால் தேவர்கள் கவலையுற்று இறைவனை வேண்ட சிவன் தனது ஐந்து முகத்தோடு ஆறாவது முகமான அதோ முகத்தைச் சேர்த்து மொத்தம் ஆறு முகத்திலிருந்தும் நெருப்பு பொறிகளை உருவாக்கினார்.

அவற்றை அக்னி மற்றும் வாயு பகவான்களின் மூலம் கங்கையின் சரவணப் பொய்கையில் சேர்ப்பிக்கச் செய்தார். நெருப்புப்பொறிகள் சரவணப் பொய்கையில் ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக மாறின.

கார்த்திகைப் பெண்கள் அவ்வாறு குழந்தைகளையும் பாலூட்டி, சீராட்டி வளர்த்தனர். ஒரு நாள் தனது குழந்தையைக் காண பார்வதி தேவி சென்ற போது ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்தாள். ஆறு முகங்கள் மற்றும் ஒரு உடலுடன் குழந்தை காட்சியளித்தது.

அப்போது பார்வதி தேவி குழந்தைக்கு ஞானப் பால் புகட்டினார். குழந்தையின் வாயிலிருந்து சிந்திய பாலை உண்ட சரவணப் பொய்கை மீன்கள் முனிகுமார்களாக உருப் பெற்றனர்.

ஆறு முகங்களை பெற்றிருந்ததால் முருகன் ஆறுமுகன் என்று அழைக்கப்பட்டார். இவ்வாறு முருகன் அவதரித்த நாள் பௌர்ணமியுடன் கூடிய வைகாசி விசாகம் ஆகும்.



திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

மாலை 18.00 மணிமுதல்
20.00 மணிவரை
பூசை வழிபாடுகள்
இடம்பெறும்.

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, 3008 Bern, Switzerland
( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

அனைத்து நாட்களும்
காலை 09.00 மணி முதல்
இரவு 20.00 மணி வரை
திருக்கோவில் திறந்திருக்கும்.

## 2019ம் ஆண்டு நாட்காட்டி

### மேழம் (சித்திரை)

02.04.19 செவ்வாய்க் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.
04.04.19 வியாழக் கிழமை — மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல்.
14.04.19 ஞாயிற்றுக் கிழமை — மேழப்புத்தாண்டு (சித்திரைப்புதுவருடம்)- “எழில்மாறல் (விகாரி)” வருடப்பிறப்பு காலை 09.00 மணிமுதல் சிறப்பு வழிபாடுகள், திருக்கோவில் இரவு 20.30மணி வரை திறந்திருக்கும்.
16.04.19 செவ்வாய்க் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்புவழிபாடுமாலை 18.30 மணிமுதல்.
18.04.19 வியாழக் கிழமை — மேழத்திங்கள் முழுமதி-சித்திரத்திருமகன் (சித்திரகுப்த) நோன்பு, காலை 10.00 மணி
29.04.19 திங்கட் கிழமை — திருநாவுக்கரசர் குருபூசை, சிறப்புவழிபாடு,மாலை 18.30 மணிமுதல்

### விடை (வைகாசி)

02.05.19 வியாழக் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.
04.05.19 சனிக் கிழமை — மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல்.
16.05.19 வியாழக்கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.
18.05.19 சனிக்கிழமை — விடைமுறம் (வைகாசி விசாகம்) மற்றும் முழுமதி சிறப்புத் திருவழிபாடு 108 பாற்குடத்துடன், மாலை 16.30 மணிமுதல்
21.05.19செவ்வாய்க் கிழமை — திருஞானசம்பந்தர் குருபூசை, சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்
31.05.19 வெள்ளிக்கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.

### ஆடவை (ஆனி)

02.06.19 ஞாயிற்றுக் கிழமை — மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல்.
14.06.19 வெள்ளிக் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.
16.06.19 ஞாயிற்றுக் கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல்
30.06.19 ஞாயிற்றுக் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.

### கடகம் (ஆடி)

02.07.19 செவ்வாய்க் கிழமை — மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல்.
06.07.19 சனிக் கிழமை — மாணிக்கவாசகர் குருபூசை ,சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல்
08.07.19 திங்கட் கிழமை — ஆடவை (ஆனி) உத்தரம், கூத்தப் பெருமான் அருட்காட்சி மாலை 17.00 மணிமுதல்
14.07.19 ஞாயிற்றுக் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபா டுமாலை 18.30 மணிமுதல்.
16.07.19 செவ்வாய்க் கிழமை — முழுமதி சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல்.
17.07.19 புதன் கிழமை — கடகப் பிறப்பு (ஆடி),மாலை 18.30 மணிமுதல்
29.07.19 திங்கட்க் கிழமை — கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல்.
31.07.19 புதன் கிழமை — கடகத் திங்கள் மறைமதி நோன்பு (ஆடி அமாவாசை), காலை 10.00 மணிமுதல்

# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15 YEARS ANNIVERSARY

மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**